பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 12 2025 FRIDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தனிநபர் நலன் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கு பொறுமை மிகவும் அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. எண்ணெய் துரப்பன பணிகள் மற்றும் ஹைட்ரோகார்பன் உற்பத்திக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

3. நடிகர் ரஜினிகாந்தின் 75வது பிறந்தநாளையொட்டி பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. ஆந்திர மாநிலத்தில் இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

5. 19 வயதுக்குபட்டபட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில், இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

>>>>>><<<<<<

தனிநபர் நலன் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கு பொறுமை மிகவும் அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தூர்தர்ஷன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான சமஸ்கிருத ஸ்லோகம் குறித்த காணொலியை தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், சமூக நல்லிணக்கம் மற்றும் மனிதகுலத்தின் திறமைகளை சீர்குலைப்பதாக கோபம் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

எண்ணெய் துரப்பன பணிகள் மற்றும் ஹைட்ரோகார்பன் உற்பத்திக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பெட்ரோலியம் சார்ந்த தொழில் தொடங்குவதை எளிதாக்கி, எண்ணெய் துரப்பன பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பெட்ரேலியம் மற்றும் இயற்கை எரிவாயு விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறியுள்ள அவர், ஒரே குத்தகை உரிமத்தின் கீழ், அனைத்து எண்ணெய் வகைகளையும் எடுக்க புதிய விதிமுறையில் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும், புதிய விதிமுறைகளின் படி, 30 ஆண்டுகள் வரையிலான நீண்டகால குத்தகை உரிமத்திற்கான விண்ணப்பங்களை 180 நாட்களுக்குள் பரிசீலித்து முடிவெடுக்கவும் வகை செய்யப்பட்டிருப்பதாக திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

படகு சுற்றுலாவுக்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதுடன் பெரிய ஹோட்டல் குழுமங்களும் நாட்டில் முதலீடு செய்து வருவதை சுட்டிக்காட்டினார்.

வந்தேபாரத் ரயில் சேவை சுற்றுலாவை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் சாலை, ரயில் மற்றும் நீர்வழிப் போக்குவரத்திற்கான கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டதன் வாயிலாக, சுற்றுலா தொழில் இதுவரை இல்லாத

*அளவிற்கு வளர்ச்சியடைந்திருப்பதுடன், பொருளாதாரமும் வளர்ச்சி கண்டிருப்பதாக திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*சந்திரயான் 4 விண்கலம் 2027-ஆம் ஆண்டுக்குள் செலுத்தப்படும் என்று விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், நிலவின் தென்துருவத்தில் துல்லியமாக தரையிறங்கி, மண் மாதிரிகளை எடுத்துக் கொண்டு பூமிக்கு திரும்பும் வகையில் இந்த விண்கலம் வடிவமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.*

*இதற்கான பணிகள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*அதனைத் தொடர்ந்து, இஸ்ரோ மற்றும் Jaxa நிறுவனங்களின் கூட்டு முயற்சியில், சந்திரயான்-5 விண்கலம் செலுத்தப்படும் என்று குறிப்பிட்ட டாக்டர் ஜிதேந்திர சிங், இந்த விண்கலத்தின் லேண்டர் சாதனத்தை இஸ்ரோவும், ரோவரை Jaxa நிறுவனமும் வடிவமைக்கும் என்றும் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*நுரையீரல் புற்றுநோய் பாதிப்புக்கு ஆளானவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் என்று தெரியவந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.*

*மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் தேசிய நோயியல் தகவல் மற்றும் ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வில், புகை பிடிக்கும் பழக்கம் இல்லாத 53 சதவீத பெண்கள் இந்த பாதிப்புக்கு ஆளாகியிருப்பது தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டார்.*

*இவர்களில் பெரும்பாலானோர் பெருநகரங்களில் வசிப்பவர்கள் என்றும் அவர் கூறினார்.*

*மேலும், காசநோய் பாதிப்பு இல்லாத இந்தியாவை உருவாக்க, பிரத்யேக இயக்கம் தொடங்கப்பட்டிருப்பதாகவும் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.*

>>>>>><<<<<<

*மக்களவை முன்னாள் தலைவர் சிவராஜ் பாட்டீல் மஹாராஷ்ட்ர மாநிலம், Latur-ல் இன்று காலமானார். அவருக்கு வயது 91.*

*Latur மக்களவை தொகுதியிலிருந்து 7 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், மத்திய உள்துறை அமைச்சர், பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களின் ஆளுநர், மஹாராஷ்ட்ர சட்டப்பேரவை தலைவர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.*

*சிவராஜ் பாட்டீல் மறைவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*மக்களவையிலும் சிவராஜ் பாட்டீல் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

>>>>>><<<<<<

*மணிப்பூரில் ஆங்கிலேய அரசுக்கு எதிராக போராடி உயிர்த்தியாகம் செய்த வீராங்கனைகளை நினைவுகூரும் Nupi Lal தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.*

*இதனையொட்டி, மணிப்பூர் மாநிலம், இம்பாலில் Nupi Lal நினைவிடத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மரியாதை செலுத்தினார்.*

*அம்மாநில ஆளுநர் திரு. அஜய்குமார் பல்லா, முன்னாள் முதலமைச்சர் திரு. பைரேன் சிங் உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினர்.*

>>>>>><<<<<<

*நடிகர் ரஜினிகாந்தின் 75வது பிறந்தநாளையொட்டி தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ரஜினிகாந்தின் நடிப்பாற்றல் பல தலைமுறையினரை ஈர்த்துள்ளதுடன், பாராட்டையும் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள அவரது கதாபாத்திரங்கள் முத்திரை பதித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.*

*தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத கள்ளங்கபடமற்ற நெஞ்சம் கொண்டவர் ரஜினிகாந்த் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.*

*அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட தலைவர்கள் மற்றும் திரையுலகினரும் ரஜினிகாந்திற்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*>>>>>><<<<<<<*

*ஆந்திர மாநிலம், அல்லூரி சீதாராமராஜு மாவட்டத்தில் இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.*

*37 பேருடன், பத்ராச்சலம் நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து. Chintur - Naredumilli மலைப்பாதையில் சென்று கொண்டிருந்த போது, தடுப்புச் சுவரில் மோதி பள்ளத்தில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.*

*இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு, பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் பயிர் உற்பத்தி 44 சதவீதம் அதிகரித்துள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், புதிய விதை ரகங்கள், நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தியதன் காரணமாக இது சாத்தியமாகியுள்ளதாக தெரிவித்தார்.*

*வேளாண் துறையில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதி செய்து, விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*மேற்குவங்க மாநிலத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், சுமார் 58 லட்சத்திற்கும் அதிகமானோரின் பெயர் நீக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

*இவர்களில் 24 லட்சத்து 18 ஆயிரத்து 699 பேர் இறந்துவிட்டதாகவும், 19 லட்சத்து 93 ஆயிரத்து 87 பேர் இடம்பெயர்ந்து விட்டதாகவும் தெரியவந்துள்ளதாக அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.*

*>>>>>><<<<<<*

*ஜப்பானின் கிழக்கு கடலோரப் பகுதியான Aomori-யில் இன்று காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.*

*இது ரிக்டர் அளவில் 6 புள்ளி ஏழாக பதிவானது.*

*இதன் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் திரும்பப் பெறப்பட்டது.*

*கடந்த திங்கட்கிழமையன்றும் இதே பகுதியில் 7 புள்ளி ஐந்து ரிக்டர் அளவிற்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.*

*>>>>>><<<<<<*

*19 வயதுக்குபட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில், முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 30 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 251 ரன் எடுத்துள்ளது.*

*துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.*

*>>>>>><<<<<<*

*சிலியின் சாண்டியாகோவில் நடைபெற்று வரும் உலக கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா 10வது இடத்தைப் பிடித்தது.*

*>>>>>><<<<<<*